www.tamilarangam.net

# தமிழினத்தின் தலைவர்

# அமரர் அமிர்தலிங்கத்திற்கு அஞ்சலி!

அமிர் அவர்கள் தனது மனைவியான மங்கையற்கரசியுடன் இணைந்து தமிழின விடுதலைக்காக தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தார். சிங்களப்படைகள் பலமுறை அவரது உயிருக்கு ஆபத்தை உண்டுபண்ண முயன்றபோதும் உயிர் தப்பியவர் சிறுவயதிலிருந்தே தந்தை செல்வாவின் மனதில் இடம்பிடித்தவர். தந்தைசெல்வாவால் தளபதிப்பட்டம் கொடுக்கப்பட்டு தமிழர் வாக்குகளால் தெரிந்தெடுக்கப்பட்ட தமிழினத்தலைவர். சித்திரவதை, சிறைவாழ்க்கையை அனுபவித்தவர். பாராளுமன்றம் என்ன? பத்திரிகையாளர் மகாநாடு என்ன? உலகநாட்டு தலைவர்கள் என்ன? அனைவரையும் தனது திறமையால் திணற வைத்தவர்.

1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் அன்னை இந்திராகாந்தியிடம் நேரடியாகச் சென்று ஈழத்தமிழர்களை காப்பாற்றுங்கள் என்று தமிழீழத்தின் சார்பாக கேட்டார். நான் உங்களுக்கு உதவுகிறேன் நீங்கள் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்கு சென்று தமிழர் நிலமையை அவர்களுக்கும் விளக்குங்கள் என்று கூறியா அன்னை இந்திரா தனது செலவிலேயே அமிர் அண்ணனை உலகநாடுகளுக்கு அனுப்பியது மட்டுமல்ல தமிழ் இயங்கங்களுக்கு இராணுவ பயிற்சி கொடுப்பதற்கு தளங்கள் அமைப்பதற்கு இந்திய அரசாங்க மூலம் உதவிகள் பெற்றுத்தந்தவர் அமிர் அவர்கள்.

1984ம் ஆண்டு காலப்பகுதிகளில் வடகிழக்கில் தமிழ் மாணவர்கள் இராணுவ கெடுபிடிகளால் கல்வியைத் தொடரமுடியாத நிலையில் இந்தியாவிற்கு அகதிகளாக இடம்பெயர்ந்தபோது இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு ஈழத் தமிழ் மாணவர்களிற்கு பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் கல்வியைத் தொடர்வதற்கு இட ஒதுகீட்டை ஏற்படுத்திக்கொடுத்து மாணவர் வளர்ச்சியின் முன்னேற்றத்தில் முக்கிய பங்கெடுத்து தமிழ் சமூதாயத்தின் கல்வி மேம்பாட்டை வளப்படுத்தினார்.

1989ம் ஆண்டு புலிகள் பிரேமதாசா அரசுடன் சமாதான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் அதிகாரவெறி பிடித்த புலிகளால் அமிர் அவர்களுடன் பேசவேண்டும் என்று கூறி அவர் வீட்டுக்குச் சென்று அந்த வீட்டிலேயே தேனீரை வாங்கி குடித்துவிட்டு அமிர் அண்ணனையும் யோகேஸ்வரனையும் அவர்கள் துணைவியர்கள் முன்னிலையிலேயே காட்டு மிராண்டித்தனமான முறையில் சுட்டுக்கொன்றனர். சுட்ட பின்னர் பிரபாகரன் சொன்னார் தமிழ்ஈழத்தை அமிர் கைவிட்டு விட்டார் அதனால் மரணதண்டனை என்று. பிரபாகரன் ஆகிய நானும் தமிழ் ஈழத்தை கைவிட்டால் எனக்கும் மரணதண்டனைதான் என்று மாவீரர் தின உரையில் கூறினார். அப்படியானால் இன்றையநிலையில் என்ன சொல்லப்போகிறார் பிரபாகரன்?

தற்போது கனடா வந்திருக்கும் ஆனந்தசங்கரியும் மாவை சேனாதிராசாவும் அமிர் பிறந்ததினத்தை கொண்டாட வந்திருக்கிறார்கள். இதுவரை காலமும் அமிரின் இறந்தநாளை நினைவு கூறாமுடியாமல் துரோகத்தனம் புரிந்த பச்சோந்திகள் ஆகிய நீங்கள் அமிரின் பிறந்ததினத்தை நினைவுகூர விசா எடுத்து கடல்கடந்து கனடா வந்திருக்கிறீர்கள். துரோகிகளுக்குள் வடிகட்டிய துரோகிகள் நீங்கள் ஆகத்தான் இருக்கமுடியும்.

உங்கள் தலைவர் அமிரை படுகொலை செய்த புலிகளின் பின்னால் வால் பிடித்து பாராளுமன்ற கதிரைகளை பிடிப்பதற்காக ஏகப்பிரதிநிதிகள் என்று வாழ்த்துப்பாடி ஒருவாறு பா.உ ஆகினீர்கள். அமிர்தலிங்கத்தை கொலை செய்த புலிகளை விட நீங்கள் பச்சைத்துரோகிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதவிக்காக பழசுகளை மறப்போம் என்று பம்மாத்துவிட்டு புலிகளின் காலை நக்கும் ஆனந்தசங்கரியும் மாவை சேனதிராசாவும், வன்னியிலேயோ வடக்கிலோ கிழக்கிலோ அமிரின் பிறந்தநாளை கொண்டாட முடியாமல் ஏன் கனடாவில் கொண்டாட வந்தீர்கள்?

*யாழ் மேயர் சரோஜினி, மேயர் சிவபாலன், தங்கத்துரை (பா.உ), நீலன் திருச்செல்வம்,* மதிமுகராசா கடந்தவருடம் மட்டக்களப்பில் கொல்லப்பட்ட கூட்டணி பா.உ நிர்மலன் *சவுந்தரநாயகம்* போன்றவர்களை சிங்களப்படைகளா படுகொலை செய்தனா்? நீங்கள் நேசிக்கும் புலிகள் அல்லவா? படுகொலை செய்தனர். உங்கள் கட்சியிலிருந்து உங்களுக்காக உயிரை விட்டவர்கள் அல்லவா இவர்கள். புலிகளை அன்று எதிர்க்காமல் அப்போதே ஏகப்பிரதிநிதிகள் என்று நீங்கள் புலிகளை ஆதரித்திருந்தால் இவர்களை எல்லாம் புலிகள் கொலை செய்திருக்கமாட்டார்கள் அல்லவா. இப்போது நீங்கள் உயிர்தப்புவதற்காக பச்சோந்திகளாய் மாறியதும் மட்டுமல்லாமல் உங்களுக்காக இறந்தவர்களை மறந்திருப்பது ஏன்?

அண்ணன் அமிர் அவர்கள் வெளிநாட்டு உதவியுடன்தான் தமிழர் பிரச்சினையை தீர்க்கலாம் என்று ஆணித்தரமாக கூறிவந்தவர். தற்போது புலிகளும் அமிரின் வழியைத் கடைப்பிடிக்கிறார்கள். புலிகள் சொன்னால் வேதம் ஏனையவர்கள் சொன்னால்?

அமிர்தலிங்கம் இன்று உயிரோடு இருந்திருந்தால் தமிழ் ஈழத்துக்கு ஜசீர் அரபாத் போன்றோ நெல்சன் மண்டேலா போன்றோ உலகநாடுகளால் ஒரு மக்கள் தலைவராக ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பார். தமிழ் ஈழத்தில் அவரின்பாதம் படியாத ஊர்கள் இல்லை, சிறை வாழ்க்கை சித்திரைவதைகளை இனத்திற்காக தாங்கிக்கொண்டார்.

ஆனால் இன்று தாய்லாந்தில் தமிழர் தரப்பில் பேசச் சென்றவர்கள். லண்டன் பாலசிங்கம், வெளிநாட்டுக்காரியான அடேல் பாலசிங்கம், அமெரிக்கா உருத்திரகுமார், அவுஸ்ரேலியா மகேஸ்வரன் இவர்களுக்கு எங்கள் ஆரம்பகால போராட்ட வரலாறு தெரியுமா? அல்லது மண்ணோடும் மக்களோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களா? இல்லவே இல்லை தமிழர்களுக்காக போராட்டம் நடாத்தியவர்களா? இல்லவே இல்லை வெளிநாடுகளில் தமது பிள்ளைகளுடன் சுகபோகமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தான் இவர்கள். இவர்களா தமிழர் தரப்பு பிரதி-நிதிகள்?

ஆனந்த சங்கரி அவர்களே! மாவை சேனாதி அவர்களே தற்போது பேச்சுவார்த்தை முன்னேற்றம் கண்டுள்ளவேளையில் பிரபாகரன் தனித் தமிழ் ஈழத்தை கைவிடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். இந்நிலையில் பிரபாகரன் 18 ஆயிரம் மாவீரர்களையும் தங்கள் மரணத்தின் மூலம் தமிழீழம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பிரபாகரனுடன் கடைசி உணவருந்திவிட்டு உடம்பில் குண்டுகளை கட்டிக்கொண்டு சென்ற 300க்கு மேற்பட்ட கரும்புலிகளின் மரணத்திற்கும் 1989ம் ஆண்டு கொல்லப்பட்ட உங்கள் தலைவர் அமிர்தலிங்கத்தின் படுகொலைக்கும் நீங்கள் தற்போது ஏற்றிருக்கும் ஏகபிரதிநிதிகளிடம் இருந்து என்ன பதிலை தமிழ் மக்களிற்கு கொடுக்கப்போகின்றீர்கள்?

கனடா வாழ் தமிழ் மக்களே! சர்வதேச நாடுகளின் உதவிகளுடன்தான் எமது பிரச்சினைக்கு தீர்வு கிட்டும் என்ற மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இந்நிலையில் அமிர்தலிங்கம் உட்பட துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டு அநியாயமாக கொல்லப்பட்ட தலைவர்கள், போராளிகளின் சமாதியில் பிரபாகரன் மண்டியிட்டு மன்னிப்பு கோரும் காலம் வெகுதொலைவில் இல்லை.

*அதர்மம் என்றும் நிலைக்காது தர்மம் என்றும் நிலைக்கும்*

ஜக்கியத்திற்கும் சமாதானத்திற்குமான தமிழர் அமைப்பு - கனடா